செ.வெ.எண்: 289/2021 நாள்: 17.07.2021

**சேத்பட் திறந்தவெளி சேமிப்பு நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு மேற்கொண்டார்...**

திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் திறந்த வெளி சேமிப்பு நெல் கொள்முதல் நிலையத்தினை இன்று (17.07.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. முருகேஷ், இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சேமிப்பு நிலையத்தில் உள்ள அனைத்து நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைக்க அறிவுறுத்தினார். ஆய்வின்போது, செய்யாறு வருவாய் கோட்ட அலுவலர் திரு. விஜயராஜ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் திரு. கோபிநாத், அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் உடன் இருந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் நடப்பு காரீப் பருவம் 2020-2021 ஆம் ஆண்டில், விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் பொருட்டு, 71 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 24,826 விவசாயிகளிடமிருந்து 1,17,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லிற்கு உண்டான தொகை ரூ.225.31 கோடி விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக ECS மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட நெல்லினை பாதுகாக்கும் பொருட்டு, செங்கம் வட்டம் புதுப்பாளையம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு, தண்டராம்பட்டு வட்டம் தண்டராம்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு, வந்தவாசி வட்டம் வந்தவாசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு, செய்யாறு வட்டம் செய்யாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு, போளூர் வட்டம் போளூர் நவீன அரிசி ஆலை, செய்யாறு வட்டம் செய்யாறு நவீன அரிசி ஆலை, சேத்பட் வட்டம் சேத்பட் திறந்தவெளி சேமிப்பு மையம், வெம்பாக்கம் வட்டம் வெம்பாக்கம் திறந்தவெளி சேமிப்பு மையம், ஆகிய 8 இடங்களில் பாதுகாப்பாக உள்ள கிடங்குகளில் நெல் மூட்டைகள் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வெளிப்புறம் மற்றும் உட்புறம் உள்ள கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை பாதுகாப்பாக சேமித்து வைக்க அறிவுறுத்தியதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் 10.07.2021 முதல் 17.07.2021 வரை 3800 மெட்ரிக் டன் நெல் மூட்டைகள் 160 லாரிகள் மூலம் மேற்காணும் கிடங்குகளில் நெல் இயக்கம் செய்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**